செங்கல்பட்டு மாவட்டம்
புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம்

மதுரப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு. மு. வேல்முருகன

கி.உ.எண்- 13/2024-2025 நாள் 14.05.2024

மு.மு.எண்- 284/2024

பொருள் மனை பிரிவு / மனை உட்பிரிவு /கட்டிட வரைப்பட அனுமதி - மதுரப்பாக்கம் ஊராட்சி - தெரு/ரோடு புல எண் 29/1A,29/1B,29/4 மனை எண் 1 to 23 அகியவற்றில் மனை பிரிவு /கட்டிடம் சுற்றுச்சுவர் / கிணறு முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

பார்வை அரசு ஆணை எண் 255 நாள் 19.8.97 திரு. M/S சத்யம் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் மனுநாள் 13.05.2024

உத்திரவு -

திரு. M/S சத்யம் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரப்பாக்கம் கிராமம் தெரு புல எண் 29/1A,29/1B,29/4 மனை எண் 1 to 23 மதுரப்பாக்கம் ஊராட்சி ஆகிய பகுதிகளில் மனை பிரிவு / கட்டிடம் / சுற்றுசுவர் / கிணறு / கழிப்பிடம் / குளியலறை / கடைகள் முதல் தளம் / இரண்டாம் தளம் / பேருந்து வண்டிகள் நிறுத்துமிடம் ஆகியவைகள் கட்டவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த அனுமதியானது ஒரு ஆண்டுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.1,18,280 (ரூபாய். ஒரு லட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்றி எண்பது) மற்றும் செலுத்தியமைக்கான பலவகை ரசீது எண் 2024-2025/35/9/9/7/13 நாள 13.05.2024 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் முன்பக்கத்தில் 3.5 மீட்டருக்கு குறையாமலும் , பின்பகுதியில் 3.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விட்டிருக்க வேண்டும்.

2. தமிழ்நாடு ஊராட்சியின் 1995-ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமம் செய்வது கூடாது.

4. கட்டிட வேலைகள் நடக்கும்பொழுதே அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைப்படங்களை வைத்திருத்தல் வேண்டும்.

5. இந்த உத்திரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்காவிடில் அனுமதியை மீண்டும் புதிதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.

6. அனுமதிக்கப்பட்ட வரைப்படத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குறிய திருத்தப்பட்ட வரைப்படங்களுடன் தலைவர்/நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்திரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.

7. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாமிருந்தால் மேற்படி உத்திரவை ரத்துசெய்ய தலைவருக்கு உரிமை உண்டு.

8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமாக பொது சுகாதாரகேடு விலைவிக்காத வகையில் வைத்து இருத்தல் அவசியம்.

9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்றபின்பே குடிப்புக வேண்டும்.

10. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவுநீரை மனுதாரர் தன் செந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும் கழிவுநீர்த் தொட்டிகளும் அமைத்துக்கெள்ள வேண்டும்.

11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவே அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படவிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர் செயலர் சென்னை பெறுநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியோரிடமிருந்து அனுமதி பெற்றிட வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கெள்ள வேண்டும்.

13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேரிய பின்னறே 15தினங்களுக்குள்ளாக தலைவர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

14. கட்டிடத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

தலைவர்
மதுரப்பாக்கம் ஊராட்சி
புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம்

தலைவர்
மதுரப்பாக்கம் ஊராட்சி

பெறுநர

திரு. M/S சத்யம் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட்
எண். 8/11, காமாட்சி காலனி,
ஷர்மிளா தெரு, தாம்பரம்,
சானடோரியம், சென்னை 600 047.